மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, சென்னையில் குடிசை மாற்று வாரியம் இருக்கிறது. அந்த வாரியத்தின் தலைவரே கேள்வி கேட்கிறார். அவரே குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டித் தரட்டும்.

*2 வினு—**திரு. நா. வீராசாமி :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிராமப் பகுதிகளில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமேதாவது அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். போதுமான அளவுக்கு வீடுகள் கட்ட முடியவில்லை. மத்திய அரசாங்கம் கொடுத்த உதவி நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு லட்சக்கணக்கான ஏழைகளுக்கு, அரிசனங்களுக்கு பட்டாக்கள் வழங்கியிருக்கிறது. அரிசனங்களுக்கு இனி பட்டாக்களாக வழங்காமல், மத்திய அரசாங்கத்திடம் அல்லது எல். ஐ. சி. மூலமாக கடன் பெற்று, வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, வீடுகளைக் கட்டிக்கொள்ளக்கூடியவர்கள் கட்டிக் கொள்ளுகிறார்கள். கடனைத் திருப்பிக் கட்ட முடியாதவர்களால் எப்படி வீடுகளைக் கட்டிக் கொள்ள முடியும் அப்படிப்பட்டவர்களுக்காக அரசு வீடுகளை கட்டிக் கொடுப்பதற்காக வேண்டிய நிதி வசதி வேண்டும். எல்.ஐ.சி. மூலமாக அல்லது தேசிய மயமாக்கப்பட்ட பாங்குகளின் மூலமாக கடன் தரும்படிக் கேட்டிருக்கிறோம். மத்திய அரசு ஒத்துக் கொண்டு அனுமதித்த பிறகு தான் அதைப்பற்றி யோசிக்க முடியும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, நலத்துறையின் மூலமாக பல வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது என்னவென்றால், அந்தப் பகுதிகளில் எல்லாம் அரசே நல்லபடியாக வீடுகளைக் கட்டிக் கொடுத்து, அவர்களிடத்திலே வாடகை மாதிரி வசூலித்துக் கொள்ளும் ஏற்பாடு ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, நலத்துறையின் மூலமாக வாடகைக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இப்போது இல்லை. வாடகை பாக்கி சிறிது சிறிதாகச் சேர்ந்து பிறகு அவர்கள் திருப்பிக் கட்ட முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. அவர்களிடமிருந்து அதிகாரிகளாலும் சரியாக வாடகை வசூல் செய்ய முடிவதில்லை. அதனால் பல சிக்கல்கள் எழுகின்றன. வாடகைக்காக வீடு கட்டும் திட்டம் இப்போது இல்லை. பொதுவாக அரிசன மக்களும் இப்படிப் பட்ட வீடுகளை விரும்பவில்லை.

திரு. க. மு. இராசகோபால் : தலைவரவர்களே, நாட்டுப் புறங்களில் அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதாகவும், ஆகவே அதைப் போல் நகர்ப் புறங்களில் அதாவது சென்னை போன்ற இடங்களில் அப்படித் தேவை என்று கேட்கிறார்கள். ஆனால் கட்டப்பட்டிருக்கும் வீடுகளுக்கு மானியம் கொடுக்கப்படவில்லை. திருப்பிக் கட்டப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதற்குக் காரணம் கட்டப்பட்ட வீடுகள் இடிந்து விழுவதால் அந்த மக்கள் கட்டவில்லை. அதிலும், ஊரிலே ஐந்தாறு வீடுகள் தான் கட்டப்படுகின்றன. ஒரு காலனியில் 5 பேர்களுக்குக் கொடுத்து விட்டு மீதியுள்ள நூற்றுக்கணக்கானவர்களுக்குக் கிடைக்காமற் போவதால், தகராறுகள் ஏற்படுவதற்கு வழியேற்படுகிறது. எனவே, ஒரு காலனியை எடுத்துக் கொண்டால், சென்னையில் கட்டுவது மாதிரி கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சென்னைபோன்ற நகரங்களில் ஏராளமானவர்கள் குறிப்பிட்ட இடங்களில் வாழ்கிறார்கள். கிராமங்களில் அப்படி ஆயிரக்கணக்கான அரிசன மக்கள் ஒரேயிடத்தில் வாழவில்லை. தவிர ஏற்கனவே கட்டிக் கொடுத்த வீடுகளில் சில சரியாக இல்லை, இடிந்து வீழ்ந்தன. அந்த வீடுகளுக்குக்கூட அரசாங்கம் பொறுப் பேற்று ரிப்பேர் செய்ய, சீர்திருத்தம் செய்ய பொறுப்பேற்றுக் கொண் டிருக்கிறது. கடன் முறையில் கட்டிக் கொடுத்த வீடுகள் சரியாக இயங்காத தால் தான் இந்த அரசாங்கம் நிலத்துறை மூலம் நல்ல முறையில் கட்டிக் கொடுத்துக் கொண்டு வருகிறது. ஆனால் சென்னையைப் பொறுத்த வரையில் அதிக அக்கறை காட்டி, குடிசை மாற்று வாரியம் மூலம், மாடிவீடுகள் கட்டிக் கொடுத்து வருகிறோம். அவைகள் நீண்ட காலம் உழைக்கக்கூடிய வீடுகள்.

திரு பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, கிராமப் பகுதிகளில் வீடுகள் கட்டாமல் மற்ற சமுதாயத்தினர் வாழும் பகுதியில் கட்டினால், சமுதாயச் சீர்திருத்தம் மேலும் வலுவடையும் என்று கூறுகிறார்களே, அது பற்றி அரசாங்கம் என்ன கருதுகிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கூறிக் கொண் டிருக்கிற நிலைதான் இருக்கிறதே தவிர, கூடி வாழும் நிலையில் வரவில்லை. இரண்டு சமுதாய மக்களும் ஒத்துழைத்தால், உறுப்பினர் கூறியபடி கேட்கலாம்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, வீடுகள் கட்டிக் கொடுப்பதில் மலைவாசிகளுக்குக் காட்டப்படும் சலுகை நமது நாட்டிலுள்ள நரிக் குறவர்களுக்கும் காட்டப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எல்லோருக்கும் காட்டப்படும்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, 1967-க்கு முன்னால் அரிசனங்களுக்குக் கட்டப்பட்ட வீடுகள், தனிப்பட்ட கண்டிராக்டர்கள் மூலம் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அது கட்டப்பட்ட பத்தாவது நாளிலே முக்கால்வாசி இடங்களில் விழுந்துவிட்டன. அத்தகைய வீடுகளுக்கு மறு படியும் அரசாங்கம் அனுதாபத்தோடு கவனித்து பண உதவி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட வீடுகள் சிலவற்றை அரசாங்கம் சீர்திருத்தம் செய்து கொடுக்கும் வகையில் பொறுப்பேற்று இராமநாதபுரம் மாவட்டத்தில் செய்து வருகிறோம். முற் றிலும் இடிந்த வீடுகளை எதுவும் செய்ய முடிவதில்லை. சிலஇடங்களில் நாங்களே கட்டிக் கொடுக்க முயன்று வருகிறோம். எல்லா இடங்களிலும் செய்யும் நிலையில் அரசாங்கம் இருக்கவில்லை.

திரு. கு. திருப்பதி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது, குடிசை மாற்று வாரியம் சென்னையில் இருப்பதால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் அமலில் இல்லை என்று சொன்னார்கள். மதுரை நகரில் அத்திட்டம் இல்லாததால், மதுரையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : குடிசை மாற்று வாரியம் மதுரையையும் சேர்த்து எடுத்துக்கொள்ளும்பொழுது நிச்சயமாகக் கவனிக்கப்படலாம்.

Sri Sangu Sitht Vinayagar Temple Land.

*3. *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether he has received a petition, dated 2nd April 1970 from the President, Sri Sangu Sithi Vinayagar Temple Executive Com-